

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஒன்றிய பகுதிகளில் 20 கோடியே 72 லட்சம் மதிப்பிலான 115 முடிவுற்ற திட்டப் பணிகளை கிராமம் கிராமமாக சென்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, சிறப்பு மக்கள் குறைதீர் முகாம் மூலம் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களையும் பெற்று உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார். உடன் சோழவந்தான் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் சார்பில், சமுதாய வளைகாப்பு விழாவினை தொடங்கி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு தமிழக அரசின் வளைகாப்பு பொருட்கள் மற்றும் தனது சார்பில் ஊட்டச்சத்து பொருட்களுக்கென தலா ரூ.1,000/– வீதம் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கி, வாழ்த்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), எஸ். மாங்குடி (காரைக்குடி), முத்து மாரியப்பன், திருப்பத்தூர் பேரூராட்சி துணைத்தலைவர் கான் முகமது உட்பட பலர் உள்ளனர்.

### உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற

# செஸ் வீரர் பிரணவ் வெங்கடேசுக்கு ரூ.20 லட்சம் ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிப் பாராட்டினார்!

**சென்னை, மார்ச் 14-**

**FIDE உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீரர் பிரணவ் வெங்கடேஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.20 இலட்சத்திற்கான காசோலை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2025) தலைமைச் செயலகத்தில், மொண்டெனேகுரோ நாட்டின், பெட்ரோவாக்கில் நடைபெற்ற FIDE உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரணவ் வெங்கடேஷ் அவர்களைப் பாராட்டி உயரிய ஊக்கத் தொகையாக 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், பெட்ரோவாக்கில் நடைபெற்ற FIDE உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த 18 வயதான பிரணவ் வெங்கடேஷ் அவர்கள் வெற்றி பெற்று வரலாறு படைத்ததற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் உயரிய ஊக்கத்தொகையாக 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

பிரணவ் வெங்கடேஷ் அவர்கள், 2022ஆம் ஆண்டில், கிராண்ட் மாஸ்டர் பட்டத்திற்கு தகுதி பெற்றார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்திய சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் சேலஞ்சர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற பிரணவ் வெங்கடேஷ் அவர்களுக்கு பரிசு தொகையாக 6 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பிரணவ் வெங்கடேஷ் அவர்களின் பெற்றோர் உடனிருந்தனர்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில்

# தஞ்சை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : (16.03.2025 ஞாயிற்றுக்கிழமை) நேரம்: காலை 10.00 மணிக்கு

இடம் : ஹோட்டல் மிளகு, (ரயில்வே ஸ்டேஷன் அருகில்) கும்பகோணம்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி.

### 'காலநிலை வீரர்கள்' திட்டத்தின் மூலம்

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14 –

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் "காலநிலை வீரர்கள்" திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பசுமை உட்கட்டமைப்புகளை முழுமையாக செயல்படுத்திய பள்ளிகளுக்கு பசுமைப் பள்ளிகளுக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2025) முகாம் அலுவலகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் "காலநிலை வீரர்கள்" திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்களை வழங்கி, கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் இணைய தளத்தின் மூலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான தீர்வுகளை வழங்கிடும் முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்து, தங்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள, தமிழ்நாடு புதுமைத் தொழில் முனைவோர் திட்டத்தின் (Sustain TN) இணைய முகப்பை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடலோர தமிழகத்திற்கான உயிர்க்கேடய வரைபடங்கள், பாரம்பரிய மீன்திறனுக்கான வேர்கள் பழங்குடியினரும் காலநிலை மாற்றமும், நிலையான வாழ்விடத்திற்கான சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்பிலான 3 புத்தகங்களையும் வெளியிட்டார்.

இந்நிகழ்வில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பசுமை உட்கட்டமைப்புகளை முழுமையாக செயல்படுத்தியுள்ள திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த என். பஞ்சம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, இடையக்கோட்டை நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளி, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த புகளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கஞ்சநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளைப் பாராட்டி தலைமையாசிரியர்களிடம் பசுமைப் பள்ளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

முன்னதாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் "காலநிலை வீரர்கள்" திட்ட மின் ஆட்டோக்களில் காட்சிப்படுத்தப் பட்டிருந்த, காலநிலையை பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்திட அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத பொருட்களை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலநிலை மாற்றத்தால் தமிழ்நாடு பாதிக்கப்படாமல் பாதுகாத்திட பல்வேறு முன்னெடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு பகுதியாக அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தி வரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் குறித்தும், மாற்று பயன்பாட்டு பொருட்கள் குறித்தும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த மகளிர் சுய உதவிக்கு குழு உறுப்பினர்களைக் கொண்ட "காலநிலை வீரர்கள்" என்ற புதிய முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன் முதல் கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 8.3.2025 அன்று தலா ரூ.4.83 லட்சம் மதிப்புள்ள 50 மின் ஆட்டோக்களை மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு வழங்கி விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இரண்டாவது கட்டமாக இன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலா ரூ.4.83 லட்சம் மதிப்புள்ள 50 மின் ஆட்டோக்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வழியனுப்பினார்.

இந்த மின் ஆட்டோக்களில் மகளிர் சுய உதவிக் குழுவினர் இயற்கை சிற்றுண்டிகளை விற்பனை செய்திடவும், மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

மேலும் இந்த மின் ஆட்டோக்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளும் வகையில் அதிநவீன மைக், ஒலி பெருக்கி அமைப்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலமாக பல பகுதிகளுக்கு சென்று ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை நிறுத்தவும், மஞ்சள் பை, மக்கும் பொருட்களால் தயாரிக்கப்பட்ட டம்ளர், பாக்குமட்டை தட்டு, மரக் கரண்டிகள், மறுசுழற்சி அட்டையால் செய்யப்பட்ட தட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டுவிழுப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்நிகழ்வின் போது, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல்நாத், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி சிங், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவித்திட்ட இயக்குநர் விவேக்குமார், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆர். கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்ட கழக அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமானப் பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஒன்றிய செயலாளர் திவான் ஒலி,பேரூர் செயலாளர்கள் சுடலை,குட்டி, முத்தையா, கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சூராணத்தில் தமிழக முதல்வர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கோலப் போட்டியில் பங்கேற்றவர்களுக்கு பரிசுகளை திருமதி தமிழரசி ரவிக்குமார் வழங்கி பாராட்டினார் .கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. தமிழ்மாறன் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன் நிர்வாகிகள் ரகுநாதன் பொருளாளர் ஆரோக்கியதாஸ், கண்ணன், முத்துக்குமார் ,ஜான் போஸ்கோ, இளைஞரணி சிவகுமார் ,கோபி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பாக கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் நோயாளிகள் பயன்பாட்டிற்கு 5 வீல் சேர் மற்றும் பிஸ்கட் சிவகாசி மாநகர செயலாளர் உதயசூரியன், மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி தொகுதி பார்வையாளரும் மாநில மருத்துவ அணி துணை செயலாளருமான செண்பக விநாயகம் ஆகியோர் தலைமையிலும் அணி அமைப்பாளர் செல்லத்துரை, தலைவர் முகமது மதார் மறைக்காயர், முன்னிலையிலும் அரசு மருத்துவமனை மருத்துவர் அய்யனார் அவர்களிடம் வழங்கினார். உடன் துணைத் தலைவர் சாதிக் அலி, துணை அமைப்பாளர்கள் காரியாபட்டி முஸ்தபா, சிக்கந்தர் சேட், ரியாஸ், ஜின்னா, முஸ்தபா, நாகூர் கனி மற்றும் பகுதி செயலாளர் காளிராஜன், முத்தலிப், மாநகர அமைப்பாளர் ராயல் ரபிக், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றியம் க. புதுப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட அருள்மிகு திருநீலகண்டேஸ்வரர் கோயில் திருப்பணி தொடக்க விழா தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எம்.ஏ. தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன் புதுப்பட்டி பேரூர் செயலாளர் எம்.டி.எம்.பார்த்திபன், கோவில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் உபயதாரர்கள் நன்கொடையாளர்கள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.